S. P. Ratnam
Editor
RASIKA RANJANI TAMIL DAILY
RANGOON, BURMA.

No. 11, Muthucattan Street,
CAMP Madras-3

Dated 17. 7. 60

மேன்மைமிக்க டாக்டர் அவர்களுக்கு,

நலம்; நலம் அறிய அவா.

நான் டெல்லிக்கு வந்திருந்த சமயம் என்னை அன்புடன் உபசரித்தீர்கள். என்னுடைய லட்சியத்துக்கு ஆதரவு கொடுத்தீர்கள். மிஸ்டர் தேஸாய் போன்ற முக்கியஸ்தரை சந்தித்துப்பேச வசதி தேடித் தந்தீர்கள். பர்மாவாழ் இந்தியர்-குறிப்பாக தமிழ் மக்களுக்கு அரிய பல ஆலோசனைகளை வாரி வழங்கினீர்கள். தாங்கள் காட்டிய அன்புக்கும், ஆர்வத்துக்கும், அளித்த உற்சாகத்துக்கும் எங்களுடைய உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாங்கள் என்னிடம் கொடுத்த புத்தகத்தில் தாங்களால் தமிழில் வரையப்பட்ட விஞ்ஞான பகுதி கட்டுரைகள் இன்று காணப்பட்டன. அவற்றை தங்கள் பெயருடனேயே எங்கள் தினசரி கிழமையில் பிரசுரித்து வருகின்றோம். தங்களிடம் அனுமதி பெற்று தவறியதற்கு மன்னிக்க வேண்டுகிறேன். உலகமெங்கணும் பாராட்டப் பெறும் பெரு தமிழ் அன்பரை பர்மாவாழ் தமிழர்கள் தெரிந்து கொள்ளுதலாமலிருப்பது வருந்தத்தக்க நிலை என உணர்ந்தேன். எனவே, தங்களை பர்மா தமிழர்களுக்கு அறிமுகப்படுத்துவேன்றென்ற ஆசையுடன், தங்கள் கட்டுரைகளையும், தங்களைப்பற்றிய எனது சொந்த கட்டுரை ஒன்றையும், தாங்கள் பர்மா இந்தியர்களுக்கு கூறிய ஆலோசனைகளையும் எனது "ரஸிகரஞ்சனி" தினசரி பத்திரிகையில் பிரசுரிக்கத் துணிந்தேன். தவறுகள் இருப்பின் மன்னிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன். தங்களுடைய அன்பும், ஆதரவும் எங்களுக்கு என்றென்றும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றியுள்ள தங்கள்

[illegible]